**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் கிரயம் ரூபா 706,536,074 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானமிடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தன. எனினும், இச்சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். நிலையான சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானமிடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களை உள்ளடக்கிய சொத்து வகுப்புக்களை இனங்கண்டு சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு செயல்முறை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது பல வருடங்கள் செய்யப்படாமையால் இதைச் செய்யும் போது நடைமுறைச் சிக்கல்கள் எழுந்துள்ளன. எவ்வாறாயினும், தற்போது நியமிக்கப்பட்டுள்ள முகாமைத்துவச் சபையின் அறிவுறுத்தல் மற்றும் நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2017 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி விரைவில் இம்மீள்மதிப்பீட்டு செயன்முறைகளை முடிவுறுத்தி சொத்துக்களின் நியாயமான பெறுமதி (Fair Value) கணக்கிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மீள் மதிப்பீடு 2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்கீட்டுக் கொள்கை 4.4 இன் பிரகாரம் மூலதன மானியத்தின் மூலம் பெறப்பட்டிருந்த சொத்துக்கள் காலக்கழிவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் பெறப்பட்டமைக்காக 2002 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான 18 வருடங்களில் அதிகாரசபைக்கு பெறப்பட்டிருந்த ரூபா 2.671 மில்லியன் ஆன சொத்துக்கள் காலக்கழிவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். நடைமுறையல்லாச் சொத்துக்கள் பெறப்படுவதற்காக பல வருடங்களாக அதிகார சபைக்கு கிடைக்கின்ற மானியங்கள் காலக்கழிவிடப்படல் தொடர்பான சிக்கல்கள் பல வருடங்களாக காணப்பட்டு வருவதுடன் இது தொடர்பான தகவல்களை வெளியிடுவது மிகவும் சிக்கலாக இருந்தது. எனினும் காணப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போது இம் மானியங்கள் காலக்கழிவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்டவாறு கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 82,147,340 என்பதுடன் சரியான பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 83,270,195 ஆக இருந்தமையால் பணிக்கொடை ஒதுக்கம் மற்றும் வருடத்தின் பணிக்கொடைச் செலவுகள் ரூபா 1,122,355 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையால் வருடத்தின் பற்றாக்குறை அந்த அளவினால் நிதிக் கூற்றில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடப்பாண்டின் பணிக்கொடை செலவுகள் ரூபா 3,464,795 இல் உண்மையில் பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது ரூபா 3,464,795 ஆகும். | நடப்பாண்டுச் செலவுகள் சரியான முறையில் கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 195,063,403 என்பதுடன் 09 நிர்மாண | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களின் பெறுமதி | வேலை முடிவுறுத்தும் சான்றிதழ் தாமதமின்றி பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்கள் 2020 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் முடிவுறா வேலை மீதியாக காட்டப்பட்டிருந்தது. அச் செயற்திட்டங்கள் பரிசோதிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படாமை யால் பயன்படுத்தப்படுகின்ற இச்சொத்துக்களுக்கு ரூபா 7,358,187 ஆன பெறுமானத்தேய்வு நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 75,658,354.80 என்பதுடன் நிர்மாண செயற்திட்ட முடிவுறா வேலை கணக்கிலிருந்து சொத்துக்கள் கணக்கிற்கு தற்போது மாற்றப்பட்டுள்ளது. மிகுதி வேலைத்திட்டங்களுக்காக வேலை முடிவுறுத்தும் சான்றிதழ் பெறப்பட்டு உரிய சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றப்பட்டு அவற்றுக்கான பெறுமானத்தேய்வு கணக்கிடப்படல் நிதிக்கூற்றுக்களில் சரியான முறையில் குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட திரண்ட நட்டம் ரூபா 1,841,071,525 ஆனது திரண்ட நிதியமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு பதிலாக ஒன்றிணைந்த நிதியமாக காட்டப்பட்டிருந்தது. | கருத்து வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | மீண்டும் அறவிடப்பட முடியாத ரூபா 8,418,371 ஆன பெறுமதி சேர் வரி நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகளின்றி நடைமுறைச் சொத்துக்களின் கீழ் இனங்காணப்பட்டிருந்ததால் நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். 2021/12/31 திகதியில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் வியாபாரக் கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் 09 வியைாட்டுச் சங்கங்களிடம் அறவிடப்பட வேண்டியுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,982,811 என்பதுடன் அந்நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | முகாமைத்துவச் சபை உறுப்பினர் நிர்வாகப் பணிப்பாளரை உள்ளடக்கிய குழுவொன்றினால் அறவிட முடியாக் கடன்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 2022/01/06 ஆந் திகதி வரை ரூபா 3,268,986.08 ஆன மீதியொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் இந்த ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா | இணக்கம் செய்யப்படாத மீதிகள் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,004,959 ஆக இருந்தமையால் இம்மீதிகளுக்கிடையே ரூபா 5,005,523 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 5,055,523.00 ஆன இணக்கப்படாத மீதி தொடர்பாக தொடர்ந்தும் இதுவரை அறவிடப்படாதிருந்த மீதிகள் பரீட்சிக்கப்பட்டு அறவிடப்படுவதற்கும் இணக்கப்படாத மீதி தொடர்பாக விரைவில் தீர்க்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடம் 1 முதல் 13 வரையான காலப்பகுதியில் பேணப்பட்டு வருகின்ற பெறுமதி ரூபா 22.370,836 ஆன பெற வேண்டிய (வியாபார) மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | முகாமைத்துவச் சபை உறுப்பினர் நிர்வாகப் பணிப்பாளரை உள்ளடக்கிய குழுவொன்றினால் அறவிட முடியாக் கடன்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 2022/01/06 ஆந் திகதி வரை ரூபா 3,268,986.08 ஆன மீதியொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் இந்த ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 5,055,523.00 ஆன இணக்கப்படாத மீதி தொடர்பாக தொடர்ந்தும் இதுவரை அறவிடப்படாதிருந்த மீதிகள் பரீட்சிக்கப்பட்டு அறவிடப்படுவதற்கும் இணக்கப்படாத மீதி தொடர்பாக விரைவில் தீர்க்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவில் அறவிடுவதற்கான முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 8 வருட காலமாக காணப்படுகின்ற பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி ரூபா 3,297,976 வருமான வரி கணக்கிடப்படும் அறிக்கைகளில் வருடாந்தம் உள்ளடக்கப்படாமையால் அறவிடப்படுவதற்கு முடியாமல் காணப்பட்டது. | இணங்குகின்றேன். எமது அதிகாரசபையில் வருமான வரி செலுத்தப்படுவதில்லை என்பதால் வருமானவரி கணக்கிடப்படும் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய தேவையில்லை. | நீண்டகாலமாகப் பேணப்பட்டு வருகின்ற பெற வேண்டிய மீதிகள் சரியாக கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும்.- |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் குளங்கள் போன்றவற்றின் முன்பதிவுக்காக செலுத்தப்பட்டிருந்த மீள் செலுதததப்படும் வைப்புக்களின் பெறுமதி ரூபா 16,675,900 என்பதுடன் அப்பெறுமதியில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட தொடர்ந்தும் பொறுப்புக்கள் அல்லாத ரூபா 11,936,484 ஆன வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இணங்குகின்றேன். 2021.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இரு வருடங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய வைப்புக்களை விடுவிப்பதற்கும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகாலமாகப் பேணப்பட்டு வருகின்ற செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.- |
| (ஆ) | செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படாமையால் வருடம் 01 தொடக்கம் 06 வரையான காலப்பகுதியில் பேணப்பட்டு வருகின்ற ரூபா 17,741,095 ஆன பிடித்து வைக்கப்பட்ட தொகையில் தொடர்ந்தும் பொறுப்புக்களாக அல்லாத மீதிகள் இனங்காணப்பட்டு வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இணங்குகின்றேன். இப்பெறுமதிக்கான பிடிகாசுத் தொகை இதுவரையில் கோரப்படாததுடன் குறைபாடுகள் இல்லாவிட்டால் பணத்தை விடுவிப்பதற்கும் மிகுதிப் பணம் வருமானத்திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ந்தும் பொறுப்புக்களாக அல்லாத மீதிகள் இனங்காணப்பட்டு வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 வருடங்களாகக் காணப்படுகின்ற 02 கணக்குகளுக்கான மூலதன முற்பணங்களின் பெறுமதி ரூபா 11,072,007 ஐ தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். தற்போது இச் செயற்திட்டங்களுக்கான இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் இடைக்காலப் பற்றுச்சீட்டுக்கள் கிடைத்துள்ளதுடன் அப்பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு செய்யப்படும் போது இம்முற்பணத் தொகை எதிரீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 891(1) | காசுக்குப் பொறுப்பாகச் செயற்படும் உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையுடன் பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். நிதி அமைச்சின் தேசிய கணக்குகள் திணைக்களத்தின் பிணை வைத்தல் தொடர்பான சுற்றறிக்கைப் பிரகாரம் எமது அதிகாரசபைக்கு பிணை வைப்பு முறைமையை தெரிவு செய்து பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளிடமிருந்து பிணைகளைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு பிணைப் பதிவேடொன்று வைக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | (i) ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்தச் செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் தொடர்பான | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 76,964,188 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 65,069,728 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,894,460 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 118,221,194 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்கு சொந்தமான ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம் 2006 நவம்பர் 1 இலிருந்து காலாண்டிற்கு ரூபா 750,000 வீதம் நிலையான வாடகைக்கு 30 வருட குத்தகை காலப்பகுதிக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்படுவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட கால இடைவெளியில் சந்தைப் பெறுமதிக்கு ஏற்றவாறு வாடகையைத் திருத்துவதற்காக குறிப்பிட்ட நிபந்தனை வாடகை குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாமையால் அதிகாரசபைக்கு அறவிடப்பட முடியுமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட் நிறுவன மைதானத்தில் செய்யப்படுவதாக இனங்காணப்பட்ட இரு நிர்மாணச் செயற்திட்டங்களின் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குத்தகை ஒப்பந்தம் திருத்தப்படுவது தொடர்பாக சில ஆலோசனைகள் கிடைத்துள்ளதுடன் தெளிவான ஆலோசனையைப் பெறுவதற்காக அதிகார சபையின் சட்டப்பிரிவினூடாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை கிடைத்ததும் குத்தகை ஒப்பந்தம் திருத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்கு வருமானம் அறவிடப்படுகின்ற நடவடிக்கை முறையாக முகாமைப்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து பணிக்கொடைக் கொடுப்பனவுகள் நிதியத்திற்கான (Gratuity fund) தொகை வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் 2020 திசெம்பர் 31 வரை மீதி ரூபா 5,322,801 ஆகும். அத்தொகை பயனுள்ளவாறு முதலீடு செய்யப்படுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ்வருடத்தில் பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக மீண்டெழும் செலவின் கீழ் நிதி அமைச்சிடமிருந்து நிதி ஒதுக்கப்படுவதற்கு கோரப்படாததுடன் இவ்வருடத்திலிருந்து பணிக்கொடை நிதியத்தின் உள்ள பணத்திலிருந்து பணிக்கொடைக் கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் விடுவிக்கப்படாத தொகையை கணக்குப் பார்த்து பயனுள்ளதாக முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியம் பயனுள்ளதாக முதலீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கும் ஆர்.பிரேமதாச கிரிக்கெட் மைதானம் கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மைதானத்தில் காணப்பட்ட விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,149,491 ஐ 2020 மார்ச் 11 ஆந் திகதிய 31/2020 ஆம் இலக்க முகாமைத்துவச் சபை தீர்மானத்தின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 2021 திசெம்பர் 31 வரை இப்பெறுமதிஇலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை ஒப்பந்தம் திருத்தப்படுவது தொடர்பாக சில ஆலோசனைகள் கிடைத்துள்ளதுடன் தெளிவான ஆலோசனையைப் பெறுவதற்காக அதிகார சபையின் சட்டப்பிரிவினூடாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை கிடைத்ததும் குத்தகை ஒப்பந்தம் திருத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இருப்புக்களின் நட்டங்களின் அறவிடப்படுவது தொடர்பாகவும் அந்த ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய பெறுமதியை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்தக்காரர் நிர்மாண நடவடிக்கைகளின் போது பயன்படுத்திய நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றுக்காக 2020 திசெம்பர் 31 இல் 14 நிர்மாண நிறுவனங்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,048,660 ஆனது ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்படுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2021/12/31 இல் ரூபா 1,114,010.04 ஆன தொகையொன்றை உரிய ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மிகுதி அறவிடப்பட வேண்டிய தொகை செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் மூலம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடப்படுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையின் பணியாளர் தங்குமிடக் கட்டிடம் நிர்மாண செயற்திட்டத்தின் 2 வருடங்கள் மற்றும் 5 மாதங்கள் ஆன காலதாமதம் சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் பிரதான வாயில் மற்றும் சுற்றி இரும்பு வேலி அமைக்கும் திட்டம் 2 வருடங்கள் காலதாமதம் மற்றும் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் ஆடை மாற்றும் அறைகள், மலசல கூடம் மற்றும் சிற்றுண்டிச்சாலையை புதுப்பிக்கும் செயற்திட்டத்தில் 1 வருடம் மற்றும் 04 மாதங்கள் காலதாமதம் 2021 திசெம்பர் 31 இல் அவதானிக்கப்பட்டது. வேலைை முடிப்பதற்கான முற்பணமாக ரூபா 28,878,856 கொடுப்பனவு செய்யப்பட்டு இச்செயற்திட்டம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்படாத காரணத்தினால் 2020 திசெம்பர் 31 இல் இச்செயற்திட்டம் மூன்றில் அறவிடப்படாத வேலை தொடங்குவதற்கான முற்பணத் தொகை ரூபா 11,585,802 ஆனது அதிகாரசபைக்கு தீர்ப்பதற்கு தாமதமாகி இருந்தது. | தங்கும் கட்டிடத்தின் நிர்மாணச் செயற்திட்டத்திற்கான அதன் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோது கொவிட் 19 தொற்றுநோய் ஏற்பட்டமை மற்றும் நாட்டில் நடமாடக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டமை, இக்கட்டிடம் நாட்டின் தேவையின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கான தனிமைப்படுத்தல் மையமாக வழங்குவது மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் காலநிலை நிலைமையைக் கருத்திற் கொண்டு மதியுரை நிறுவனத்தின் நிர்மாணக் காலத்தை நீடிப்பதற்கான பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. இத்துடன் இச்செயற்திட்டத்திற்கான தற்போது செலுத்தப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களில் ஒப்பந்தத்தின் பிரகாரம் முற்பணத்தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன் இதுவரை இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் மதியுரை நிறுவனத்தால் பரீட்சிக்கப்பட்டு இறுதிக் கட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இறுதிப் பற்றுச்சீட்டுக்களில் மிகுதி தீர்ப்பனவிற்கான முற்பணத் தொகை முழுமையாக தீர்க்கப்பட்டிருந்தது. ஆடைகள் மாற்றும் அறைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் புதுப்பிக்கும் செயற்திட்டங்களுக்கான நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இச்செயற்திட்டம் 20 வருடங்களுக்கும் மேல் பழைமையான கட்டிடம் என்பதால் இதன் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் | அதிகார சபைக்கு அறவீடுகள் விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சில குறைபாடுகள் காணப்பட்டமையால் கையளித்தல் மற்றும் கையேற்பு நடவடிக்கைகள் தாமதமாகியிருந்ததுடன் இறுதி பற்றுச்சீட்டுக்கள் செலுத்தப்படுவதற்கும் தாமதமேற்பட்டுள்ளது. இதுவரை மதியுரை நிறுவனத்தினால் இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் பரீட்சிக்கப்பட்டு இந்த அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து முழுமையான முற்பணத் தொகை தீர்க்கப்படும். | |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையின் காற்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் 2011 ஒக்தோபர் 13 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 6 மாத காலப்பகுதிக்குள் முடிப்பதற்காக ரூபா 32,000,000 (வரி நீங்கலாக) ஆன பெறுமதிக்கு தனிப்பட்ட நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. விளையாட்டு மைதானம் முடிக்கப்பட்ட பின்னரும் குறைபாடு காணப்பட்ட காரணத்தால் விளையாட்டு மைதானம் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்டது. இம்மைதானத்தின் குறைபாடுகளை சரி செய்வதற்கு அதிகாரசபை தவறிவிட்டதுடன் இப்பணிக்காக அதிகாரசபையினால் செலவிடப்பட்ட ரூபா 38,272,147 மீண்டும் அறவிடப்படுவதற்கு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக அவ்வவ்போது ஒப்பந்த நிறுவனத்திற்கு குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அவ்வவ்போது ஒப்பந்த நிறுவனம் மூலம் குறைபாடுகள் சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. முன்னால் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் பிரகாரம் இலங்கையின் ஒரேயொரு சர்வதேச நிறுவனமான இம்மைதானத்தில் நாட்டு வீரர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டதால் மீண்டும் ஓட்டப்பாதை மற்றும் விளையாட்டு மைதானத்தை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் செயற்திட்டத்திற்கான பிடிகாசுத் தொகை மற்றும் இறுதிப் பற்றுச்சீட்டுக்களின் ஒரு பகுதியான ரூபா 11 மில்லியன் ஆன தொகை ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தப்படாது பிடித்து வைக்கப்பட்டுள்ளது. | முறையான நியமமின்றி மேற்கொள்ளப் பட்டுள்ள செயற் திட்டங்களுக்கு செலவிடப்படுகின்ற தொகை அதிகார சபைக்கு மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையில் 2020 திசெம்பர் 31 இல் உதவிப் பணிப்பாளர் ஊடகம், மின்சாரம் போன்ற சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர், பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான உத்தியோகத்தர், பெறுகை உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு முகாமையாளர் போன்ற மூன்றாம் நிலையில் 04 வெற்றிடங்களும் உட்பட 69 மொத்த வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரசசபை தவறியிருந்தது. | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), (தொழில்நுட்பம்) போன்ற பதவிகளில் 2020 ஆம் ஆண்டில் வெற்றிடங்கள் காணப்படவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஊடகம் மற்றும் மின்சார சிரேஷ்ட நிலைப் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படுவதற்கு புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி விரைவில் ஆட்சேர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |